

## மத்திய அரசுடன் இணைந்து 5 உயர்தாக்கம் கொண்ட திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துதல்

### 01

**மத்திய அரசுடன் இணைந்து செரம்பான் சென்ட்ரல் திட்டத்தை செயல்படுத்துதல்**

நெகிரி செம்பிலான் மக்களுக்கு கோலாலம்பூர்–செரம்பான் இடையே எளிதாகப் பயணிக்க TOD (போக்குவரத்து மைய வளர்ச்சி) திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

### 02

**மத்திய அரசுடன் இணைந்து நீலாய், பண்டார் என்ஸ்டெக்கில் புதிய மருத்துவமனை அமைத்தல்**

சுகாதார சேவைகளின் திறனை உயர்த்தி, தற்போதைய மருத்துவமைனகளில் மக்கள் நெரிசலைக் குறைத்து, மக்களுக்கு தரமான சிகிச்சை சேவையை வழங்குவதே நோக்கமாகும்.

### 03

**மத்திய அரசுடன் இணைந்து போர்ட் டிக்சனில் புதிய அனைத்துலக துறைமுகத்தை உருவாக்குதல்**

மாநிலத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, தரமான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அனைத்துலக முதலீடுகளை நெகிரி செம்பிலானுக்கு ஈர்த்தல்.

### 04

**FELDA குடியிருப்பு நிலங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் கட்ட அனுமதி வழங்குதல்**

பெல்டாவின் இரண்டாம் தலைமுறையினர் தங்களது சொந்த நிலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை கட்டுவதற்கு சட்டத் திருத்தம் செய்து வசதியளித்தல்.

### 05

**செனாவாங்–கிள்ளான் துறைமுகம் பைபாஸ் ரயில் பாதையை முன்னெடுத்தல்**

மாநிலத்தின் தொழில்துறை மற்றும் தளவாடத் துறையின் வளர்ச்சிக்கு புதிய ஊக்கமாக ரயில் இணைப்பை மேம்படுத்துதல்.



# தொடரட்டும் KEKAL 坚守希望 HARAPAN



## பக்காத்தான் ஹராப்பான் – நெகிரி செம்பிலான் தேர்தல் அறிக்கை

Diterbit dan dicetak oleh Pakatan Harapan
Merchant Square, A-1-09, Jalan Tropicana Selatan 1, 47410 Petaling Jaya, Selangor

# நெகிரி செம்பிலான் முன்னேற்றம் 2045



நெகிரி செம்பிலானை நிலையான,முற்போக்கான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மாநிலமாக தொடர்ந்து முன்னேற்றுவதற்கு பக்காத்தான் ஹராப்பான் உறுதிமொழி எடுத்துள்ளது.இந்த தேர்தல் அறிக்கை,மக்களின் தேவைகள்,நிலையான பொருளாதார வளர்ச்சி,தரமான வேலைவாய்ப்புகள்,விரிவான நலத்திட்டங்கள் மற்றும் சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் சமநிலையான வளர்ச்சியை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

நெகிரி செம்பிலானை ஆட்சி செய்த காலப்பகுதியில்,நிலையான அரசாங்கம் மக்களுக்கு உண்மையான முன்னேற்றத்தை வழங்க முடியும் என்பதை பக்காத்தான் ஹராப்பான் நிரூபித்துள்ளது.மாநில வரலாற்றிலேயே அதிகளவிலான முதலீடுகளை ஈர்த்து,ஆயிரக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி,மக்களுக்கான நலத்திட்டங்களை விரிவுபடுத்தி, கல்வித் துறையை வலுப்படுத்தி,அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி, மாநிலத்தின் வலுவான நிதி நிலையை தொடர்ந்து உறுதிப்படுத்தியுள்ளது.

அதேவேளையில்,கூட்டாட்சி அரசியலமைப்பின் அடிப்படையில் இஸ்லாமின் உயரிய நிலையை மதித்து,மாநில இஸ்லாமிய நிறுவனங்களை மேலும் வலுப்படுத்தவும், (ummah) முன்னேற்றத்தை ஊக்குவிக்கவும் பக்காத்தான் ஹராப்பான் உறுதியாக செயல்படும். அதே நேரத்தில், பல இன, பல மத மக்களிடையே நல்லிணக்கம், மதச் சுதந்திரம் மற்றும் தேசிய ஒற்றுமையையும் தொடர்ந்து பாதுகாக்கும்.

இந்த தேர்தல் அறிக்கை வெறும் வாக்குறுதிகளின் தொகுப்பு இல்லை.ஏற்கனவே வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட கொள்கைகளின் தொடர்ச்சியையும்,2045ஆம் ஆண்டுக்குள் நெகிரி செம்பிலானை மேலும் முன்னேறிய, போட்டித்திறன் மிக்க,நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மாநிலமாக மாற்றும் புதிய தொலைநோக்குப் பாதையையும் இது முன்வைக்கிறது.

நிலைத்தன்மை • வளப்பம் • அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி

## 09



### சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தரமான மருத்துவச் சேவைகள்

போர்ட் டிக்சன் சர்வதேச துறைமுகம்,செனாவாங்–கிள்ளான் துறைமுகம் பைபாஸ் ரயில் பாதை, செரம்பான் சென்ட்ரல் ஆகியவை மாநிலத்தின் தொழில் மற்றும் தளவாட வளர்ச்சிக்கான புதிய இயக்கமாக முன்னெடுக்கப்படும்.மேலும்,பண்டார் என்ஸ்டெக் மருத்துவமனை அமைப்பதன் மூலம் தரமான சுகாதார சேவைகளை மக்கள் எளிதில் பெறும் வாய்ப்பு உறுதிசெய்யப்படும்.

## 10



### அனைத்து மக்களுக்கும் மத ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் முன்னேற்றம்

ஹராப்பான் (HARAPAN), பல இனங்களும் பல மதங்களும் கொண்ட சமூகத்தின் நல்லிணக்கத்தை தொடர்ந்து பாதுகாக்கும். அதேவேளையில், இஸ்லாம் கூட்டாட்சியின் அதிகாரப்பூர்வ மதமாக அதன் சிறப்புடன் நிலைநிறுத்தி, மதச் சுதந்திரத்தை உறுதிசெய்து, ஒவ்வொரு குடிமகனும் வளர்ச்சியின் பயன்களை சமமாகவும் நியாயமாகவும் அனுபவிப்பதை உறுதி செய்யும்.மகாசிட் ஷரியா (Maqasid Syariah) கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, மசூதிகள் மற்றும் சிறிய தொழுகை மையங்கள் சமூக முன்னேற்ற மையங்களாக வலுப்படுத்தி, மதப் பரப்புரையை மேம்படுத்தும். மேலும், மத இடைநிலைப் பள்ளிகளின் (Sekolah Menengah Agama) உள்கட்டமைப்பை மேம்படுத்தி, முஸ்லிம் அல்லாத மத விவகார நிதி (Dana Hal Ehwal Bukan Islam – HEBI) தொடர்ந்து வழங்கப்பட்டு, நெகிரி செம்பிலானில் உள்ள கம்புங் பாரு மற்றும் பாரம்பரிய கிராமங்கள் மேம்படுத்தப்படும்.இந்த நோக்கத்திற்கு இணங்க, ஹராப்பான் மக்களிடையேயான ஒற்றுமையை மேலும் வலுப்படுத்த "சமூக நல்லிணக்கத் திட்டம்" (Program Komuniti Harmoni)-ஐ செயல்படுத்தும். இது நெகிரி செம்பிலானின் பலமாக உள்ள மக்களின் ஒற்றுமையை மேலும் உறுதிப்படுத்துவதோடு, பல்வேறு கலாச்சார விழாக்களுக்கான ஆதரவு நிதியையும் வலுப்படுத்தும்.



## 02



# மக்கள் நலத் திட்டம் (SSR) வலுப்படுத்தல்

நெகிரி செம்பிலான் மக்கள் யாரும் விடுபடாமல் இருப்பதே உண்மையான வளர்ச்சியாகும்.

மக்களின் நலனுக்கான SSR திட்டத்தை வலுப்படுத்தி,அதன் ஒருமுறை நிதியுதவித் தொகையை உயர்த்துவதன் மூலம்,நெகிரி செம்பிலான் மக்களின் பிறப்பு முதல் முதிய வயது வரையிலான அனைத்துக் காலகட்டங்களிலும் அவர்களுக்குத் துணை நிற்க ஹராப்பான் கடமைப்பட்டுள்ளது.

| தொகுதிகள் | நிதியுதவி |
|---|---|
| புதிய பிறந்த குழந்தை (SSPN பங்களிப்பு) | RM 200 |
| முதல் குழந்தை பராமரிப்பு மையக் கட்டண உதவி | RM 300 |
| முழு உறைவிடப் பள்ளி மாணவர் | RM 300 |
| உயர்கல்வி (இளங்கலை-STEM) மாணவர்கள் | RM 1,500 |
| உயர்கல்வி (இளங்கலை) மாணவர்கள் | RM 1,500 |
| உயர்கல்வி (டிப்லோமா) மாணவர்கள் | RM 1,000 |
| உயர்கல்வி (சான்றிதழ்) மாணவர்கள் | RM 500 |
| முதல் வகுப்பு பட்டதாரி | RM 5,000 |
| பள்ளி மாணவர்களுக்கு உதவி (RM70 × 11 மாதங்கள்) | RM 770 |
| மாநில பூர்வகுடி மாணவர்களுக்கு உதவித் தொகை | RM 800 |
| முதல்முறை திருமணம் மேற்கொள்பவர்கள் | RM 500 |
| 70 வயது மேற்பட்ட முதியோர் (வருடத்திற்கு) | RM 300 |
| 60 - 69 வயது முதியோர் (வருடத்திற்கு) | RM 200 |
| RM2,000-க்கும் குறைவான வருமானம் பெறும் ஒற்றைத் தாய்மார்கள் (வருடத்திற்கு) | RM 300 |
| B40 ஏழைக் குடும்பங்கள் | உணவு வங்கி திட்டம் |
| SPM மற்றும் SPTM (Straight A) மாணவர்கள் | RM 1,000 |
| புற்றுநோய் சிகிச்சை உதவி | RM 1,000 |
| எலும்பியல் சாதனங்கள் வாங்க உதவி | RM 1,000 |
| சிறுநீரக சுத்திகரிப்பு சிகிச்சை உதவி (Fistula அறுவைச் சிகிச்சை) | RM 2,800 |

## 03



# போட்டித்திறன் மிக்க பொருளாதாரம் மற்றும் 50,000 உயர்வருமான வேலைவாய்ப்புகள்

நெகிரி செம்பிலான் இளைஞர்களின் எதிர்காலம்,தரமான வேலைவாய்ப்புகள்,உயர்ந்த வருமானம் மற்றும் வலுவான பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைய வேண்டும்.Malaysia Vision Valley 2.0 திட்டத்தின் மூலம்,புதிய முதலீடுகளை ஈர்த்து, உயர் தொழில்நுட்பத் தொழில்துறைகளை மேம்படுத்தி,50,000 தரமான உயர்வருமான வேலைவாய்ப்புகள் உருவாக்கி, வேலை தேடி பிற மாநிலங்களுக்கு இடம்பெயர வேண்டிய அவசியமின்றி வாழும் சூழலை பக்காத்தான் ஹராப்பான் உருவாக்கும்.

## 04



# அனைவருக்கும் தரமான கல்வி

ஒவ்வொரு நெகிரி செம்பிலான் மாணவரும் தரமான, அனைவரையும் உள்ளடக்கும் மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப கல்வி பெறுவதை பக்காத்தான் ஹராப்பான் உறுதிசெய்யும். இதற்காக, குறைந்த மற்றும் நடுத்தர வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவ நெகிரி செம்பிலான் கல்வி நிதியம் உருவாக்கப்படும். மேலும், Anak Negeri உதவித்தொகை மற்றும் பள்ளி மாணவர் உதவித் திட்டங்கள் மேம்படுத்தப்படும்.

## 05



# 20,000 மலிவு விலை வீடுகள் மற்றும் நிலப் பிரச்சினைகளுக்கு தீர்வு

சொந்த வீடு என்பது ஒவ்வொரு குடும்பத்தின் கனவாகும். அந்தக் கனவை நனவாக்க, 20,000 மலிவு விலை வீடுகள் கட்டப்பட்டு, பாதுகாப்பான மற்றும் வசதியான வீடுகளை அதிகமான மக்களுக்கு பெற்றுத் தர பக்காத்தான் ஹராப்பான் உறுதி செய்துள்ளது.அதேவேளையில்,மக்களின் உரிமைகளையும் எதிர்காலத்தையும் பாதுகாக்க நிலப் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகள் தொடர்ந்து வழங்கப்படும்

06



## இளைஞர்கள்,பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கு முன்னுரிமை

வலுவான குடும்பங்களே நல்ல சமூகத்தின் அடித்தளம். இதற்காக, நெகிரி செம்பிலான் இளைஞர் நிதியம், Upaya@9 இளைஞர் தலைமைத்துவத் திட்டம், WADANI மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை வலுப்படுத்தப்படும். மேலும், குடும்ப அமைப்பை உறுதிப்படுத்த சிறப்பு நிதி ஒதுக்கப்படும்.

07



## சுற்றுலா, பாரம்பரியம், நகர-கிராம சமநிலை வளர்ச்சி மற்றும் பெல்டா (FELDA) மேம்பாடு

வளர்ச்சி என்பது பெரிய நகரங்களில் மட்டும் குவியாமல், அனைத்து மக்களும் சமமாக பயனடைய வேண்டியது அவசியம்.பக்காத்தான் ஹராப்பான் பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளும்.நெகிரி செம்பிலான் சுற்றுலா திட்டம் 2030-ஐ செயல்படுத்தி, மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சியை வலுப்படுத்தும். Tourism, Arts and Culture @ Negeri Sembilan (TAC@N9) முயற்சியின் மூலம், மாநில கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய நிதியை மேலும் வலுப்படுத்தி, சுற்றுலா மற்றும் பண்பாட்டு துறைகளை மேம்படுத்தும். அடாட் பெர்பாத்தி (Adat Perpatih) மரபை பாதுகாக்க Perpatih Fest போன்ற நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி, பாரம்பரிய தலைவர்களின் ஊக்கத்தொகைகளையும் ஒருங்கிணைத்து மேம்படுத்தும். மத்திய அரசு மற்றும் மாநில அரசின் ஒத்துழைப்புடன், நெகிரி செம்பிலானில் FELDA மேம்பாட்டுத் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யும்.

08



## நவீன விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு

நெகிரி செம்பிலானின் திறன்மிகு விவசாயத் திட்டம் மற்றும் இளம் விவசாயி திட்டம் வாயிலாக, விவசாயத் துறை நவீனத்துவத்தை நோக்கி மிக வேகமாக நகர்த்தப்படும். இதற்குத் துணையாக, விவசாயிகளும் உணவுசார் தொழிலதிபர்களும் அதிக லாபம் தரும் நவீன விவசாயத்தில் முதலீடு செய்ய ஏதுவாக, விவசாய நில நிர்வாக முறையை இன்னும் சீரமைத்துத் தர ஹராப்பான் தொடர்ந்து பாடுபடும்.



# 10 நெகிரி செம்பிலானுக்கான பக்காத்தான் ஹராப்பானின் முக்கிய உறுதிமொழிகள்

01



## நிலையான, தூய்மையான மற்றும் மக்கள்நல அரசாங்கம்

நமது அரசியல் சூழல் அமைதியாகவும்,ஒரு வலுவான அரசாங்கத்தை அடித்தளமாகக் கொண்டு இருக்கும்போது மட்டுமே பொதுமக்களால் குடும்பங்களை உருவாக்கவும், வசதியான வாழ்க்கையை அனுபவிக்கவும் முடியும்.

மக்களின் நலனுக்காக எவ்வித இடையூறும் இன்றி வளர்ச்சியைத் தொடர, வெளிப்படையான,திறமையான மற்றும் ஊழலற்ற அரசாங்கத்தைத் தக்கவைக்க ஹராப்பான் உறுதிகொண்டுள்ளது.